DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 151/2016

List of Witness : Lw5

Prosecution Witness : PW4

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செந்தில்குமார் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | தமிழரசன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 11/05/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் கம்பிளிநாயக்கன்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 2015 ஆம் வருடம் தேதி மாதம் ஞாபகம் இல்லை. இரவு சுமார் 9.00 மணியளவில் கம்பிளிநாயக்கன்பட்டியில் உள்ள வடக்கு தோட்டத்தில் நானும், அருண், தனசேகர் மற்றும் சிலர் அங்கு இருந்தோம். அங்கு போலீசார் சம்பவத்தை குறித்து விசாரித்து சம்பவ இடத்தை படம் வரைந்து கொண்டிருந்தார்கள். அப்போது என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். என்னுடன் சுப்பிரமணி என்பவரும் கையெழுத்து செய்து கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் மேற்சொன்ன அருண், நரேஷ்குமார், சுப்பிரமணி, அரவிந்த் ஆகியோர் எனது உறவினர்கள் என்றால் சரிதான், பக்கத்து பக்கத்து தோட்டத்தில் உள்ளோம். நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல, அங்கே வைத்து தான் தயார் செய்தார்கள். பார்வை மகசரும்,

வரைபடமும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க புகார் எனது உறவினர் என்பதால் நான் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.05.11 19:15:39 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 11/05/2026